மங்கள வைபவங்களுக்கு
தேவையான
பட்டுப் புடைவைகள்
மற்றும்
சிறுவர்களுக்கான
தெரிவுகளுக்கு
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

இன்றைய அறிமுகம்
நாளைய நாகரீகம்!!
ஆடிக்க ஆடைகளில்
சோபிக்க சோபனா
சோபனா
ஆடை அகம்
16, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஐப்பசி 24 வியாழக்கிழமை (10 — 11 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 350

## ஜனாதிபதித் தேர்தல்

# சந்திரிகா முன்னணி!



சந்திரிகா குமாரதுங்கா

## அவரின் வெற்றி உறுதி!!

கொழும்பு, நவம்பர் 10

நேற்று நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் வாக்குகளை எண்ணும் பணி நேற்று மாலை ஆரம்பமானது முதல் எண்ணப்பட்ட வாக்குகளில் பொதுமக்கள் ஐக்கிய முன்னணி வேட்பாளரும் பிரதமருமான சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்னணியில் திகழ்ந்தார்.

தபால்மூல வாக்களிப்பு முடிவுகள் முதலில் வெளியாகின.

நேற்று நள்ளிரவுக்குச் சற்று முன்னர் 11.15 மணியளவில் திருகோணமலை மாவட்டத்துக்குரிய தபால்மூல வாக்களிப்பு முடிவுகள் வெளியாகின. அது முதல் தொடர்ந்து வெளியான தேர்தல் முடிவுகளில் சந்திரிகா குமாரதுங்கா முன்னணியில் திகழ்ந்தார்.

ஐ. தே. க. வேட்பாளரான சிறிமா திஸாநாயக்கா தவிர ஏனைய வேட்பாளர்கள்— டாக்டர் ஹரிச்சந்திர விஜேதுங்க (சிங்கள மகாசம்மத பூமி புத்ர கட்சி), நிஹால் கலப்பதி (ஸ்ரீ லங்கா முற்போக்கு முன்னணி), ஹட்சன் சமரசிங்க (சுயேச்சை), ஏ. ஜே. ரணசிங்க (சுயேச்சை) ஆகியோர் வாக்குகளில் மிகவும் பின் தங்கிய நிலையிலேயே இருந்தனர்.



ஐ.தே.க. வேட்பாளர்
சிறிமா

## சுமுகமான தேர்தல்

கொழும்பு, நவ. 10

ஜனாதிபதித் தேர்தலை ஒட்டி தெற்கில் நிலவிய அரசியல் பதற்றநிலை காரணமாக அங்கு வன்செயல்கள் வெடிக்கலாம் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் — பெரிய அளவிலான அசம்பாவிதங்கள் எதுவுமின்றி ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு நேற்று அமைதியாக நடந்ததாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன.

வாக்களிப்பை அடுத்து நேற்றிரவு ஊரடங்குச்சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப்பட்டதால் வாக்களிப்பின் பின்னரான வன்செயல்கள் வெடிக்கும் வாய்ப்பு நேற்றிரவு குறைவாக இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டது.

தேர்தலை ஒட்டி நாடு முழுவதிலும் பாதுகாப்புத் தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. இந்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேலும் ஒரு வார காலத்துக்கு நீடிக்கும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

தேவை ஏற்படின் அழைக்கக்கூடிய நிலையில் இராணுவமும் ஏனைய படையினரும் நேற்று தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

நேற்று மாத்தறை மாவட்டத்தில் குருந்துவத்தை என்ற இடத்தில் தேர்தல் பணியில ஈடுபட்டிருந்த ஐ. தே.க. ஆதரவாளர் ஒருவர் கத்தியால் குத்தப்பட்டார்.

கண்டியிலும் சில வன்முறைச் சம்பவங்கள் இடம் பெற்றன. எனினும் பொலீஸார் தலையிட்டு நிலைமை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவினரின்பாதுகாப்பு: பிரதமருடன் ரணில் பேச்சு

ஜனாதிபதி தேர்தல் முடிந்த பின்னர் ஐக்கிய தேசியக் கட்சியினருக்கு பாதுகாப்பு வழங்குவது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவைச் சந்தித்துப் பேசினார்.

நேற்று முன்தினம் இடம் பெற்ற அச்சந்திப்பின்போது அரசு தரப்பில் பிரதமரின் செயலாளர் குசும்சிரி பலப்பட்டபெண்டி, பாதுகாப்புப் பிரதி அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த, பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஜெனரல் வனசிங்கா, முன்னாள் பொலீஸ் மா அதிபர் சிறில் ஹெரத் ஆகியோர் கலந்து கொண்டனர்.

ரணிலுடன் ஐ. தே. க. பொதுச் செயலாளர் காமினி அத்துக்கோறளை மற்றும் பாலித பெல்பொல ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேர்தலின் பின்னர் நாட்டில் அமைதியும் பாதுகாப்பும் நிலவ செய்யவேண்டிய அவசியம் குறித்து இச்சந்திப்பின் போது வலியுறுத்தப்பட்டது.

## அமைதி பேணுமாறு பிரதமர் வேண்டுதல்!

கொழும்பு, நவ. 10

பொதுத்தேர்தல் முடிவுகளை ஏற்றுக்கொண்டது போல ஜனாதிபதி தேர்தல் முடிவுகளையும் அமைதியான முறையில், ஏற்றுக் கொள்ளுமாறு பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா பொது மக்களைக் கேட்டுள்ளார்.

வானொலி — தொலைக்காட்சி ஆகியவை மூலம் நாட்டு மக்களுக்கு விடுத்த செய்தியிலேயே அவர் மேற்கண்டவாறு கோரியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

அச்ச நிலை நீக்கப்பட்டு மீண்டும் அமைதியை ஏற்படுத்த புதிய பாதையில் நாடு இட்டுச் செல்லப்படும் என்ற உறுதிமொழியை வழங்கி தற்போதைய அரசு பதவிக்கு வந்தது.

இந்த அரசு பதவிக்கு வந்த பின்னர் அச்ச நிலைமையை ஒழித்து, தேர்தலுக்கு பின்னர் இடம்பெறக் கூடிய வன்முறைகளில் இருந்து அப்பாவி மக்களை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

அச்சம் நீங்கி சமாதானமும், மனித பண்பாடும் மேலோங்கும் சமுதாயம் ஒன்றை கட்டி எழுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்காக எமது அரசு எடுத்த நடவடிக்கைகளை

(4 ஆம் பக்கம் பார்க்க)

## கள்ள வாக்கு: 15 பேர் கைது

கொழும்பு, நவ. 10

நேற்றைய தேர்தலில் கள்ளவாக்கு போட முயன்றார்கள் என்ற சந்தேகத்தில் 15 பேர்வரை கைது செய்யப் பட்டதாகத் தெரிவிக்கப் பட்டது. (உ-6)

## 65 வீத வாக்களிப்பு

கொழும்பு, நவ. 10

நேற்று இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் 65 வீதமானோர்வரை வாக்களித்ததாக முதலில் கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

கடந்த ஓகஸ்டில் பொதுத் தேர்தலின் போது காணப் பட்ட ஆர்வமும் விறுவிறுப்பும் நேற்றைய தேர்தலில் காணப்படவில்லை என செய்தி ஏஜென்ஸிகள் தெரிவித்தன,

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளர்கள் நம்பிக்கை குறைந்தவர்களாகக் காணப் பட்டதும் தேர்தலில் விறுவிறுப்பு ஏற்படாமைக்கு ஒரு காரணம் எனத் தெரிவிக்கப் பட்டது. (உ-எ-6)

## தபால் மூல வாக்களிப்பு பட்டியலில் மோசடி!

### பலர் கைது செய்யப்படலாம்

கொழும்பு, நவ. 10

அரச ஊழியரல்லாதவர்களின் பெயர்கள் தபால் மூலம் வாக்களிப்போர்பட்டியலில் சேர்க்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக களுத்துறைப் பகுதியில் பலர் கைது செய்யப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஹொரணை கல்வித் திணைக்களத்தில் பணிபுரியாத சிலரின் பெயர்கள் களுத்துறை மாவட்ட தபால் வாக்காளர் பட்டியலில் இடம் பெற்றிருந்தது குறித்து அம் மாவட்ட அரச அதிபர் அண்ட்ரு டிசில்வா பொலீஸுக்கு முறையிட்டிருந்தார் அதனைத் தொடர்ந்து மூன்று உயர் அரச அதிகாரிகளின் வாக்குமூலங்களை உதவி பொலீஸ் அதிபர் பதிவு செய்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (உ-எ)

## முச்சந்தி முரளி



அப்ப... ஆனையின்ரை ஆட்சி அடியோடு போச்சு எண்டு சொல்லுங்கோ...!

## தென் மாவட்டங்களில் பாதுகாப்புத் தீவிரம்!

தேர்தல் வன்செயல்கள் இடம்பெறலாம் என எதிர் பார்க்கப்பட்ட மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களில் மேலதிகமாக சுமார் 2 ஆயிரம் பொலீஸார் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருப்பதாக தென் மாகாண பிரதிப் பொலீஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரத்தின தெரிவித்தார்.

நேற்று முன்தினம் முதல் இவ்விரு மாவட்டங்களிலும் பாதுகாப்பு தீவிரப்படுத்தப் பட்டிருப்பதாக தெரிவிக்கப் படுகிறது. (உ-6)

## ரணிலும் கோரிக்கை

தேர்தலின் பின்னர் அமைதி பேணும்படி எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவும், தொலைக்காட்சியில் தோன்றி மக்களிடம் கோரிக்கை விடுத்தார்.

ரணில் விக்கிரமசிங்கா கொழும்பு கறுவாக்காட்டில் உள்ள வாக்களிப்பு நிலையத்தில் நேற்று வாக்களித்தார்.

ஐ.தே.க. வேட்பாளர் சிறிமா திஸாநாயக்கா ஜனாதிபதித் தேர்தலில் வெற்றியீட்டுவார் எனத் தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார். (உ-எ-6)

## ஊரடங்கு அமுலில்! ஊர்வலங்களுக்கு தடை!

நேற்று இரவு 11 மணியிலிருந்து நாடு முழுவதும் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட ஊரடங்குச் சட்டம் இன்று காலை 9 மணிக்கு நீக்கப்படும் என்றும்—

இன்று பிற்பகல் 2 மணிக்கு மீண்டும் ஊரடங்குச் சட்டம் அமுலுக்கு கொண்டு வரப்பட்டு நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நீக்கப்படும் என்றும்—

அறிவிக்கப்பட்டுள்ளது.

அவசியம் ஏற்படுமாயின் ஊரடங்குச் சட்டம் மேலும் அமுல் செய்யப்படும் பின்னர் அறிவிக்கப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ஊரடங்குச் சட்டத்தை கண்டிப்பாக அமுல் செய்யுமாறு பொலீசாருக்கும், பாதுகாப்பு படையினருக்கும் விசேட பணிப்புரைகள் விடுக்கப்பட்டுள்ளன.

ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத நேரங்களிலும் ஊர்வலங்கள் நடத்துவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

இந்த நடைமுறை மறு அறிவித்தல் வரை அமுலில் இருக்கும் என பாதுகாப்பு அமைச்சு அறிவித்திருக்கின்றது. [உ-3]

## ஓஸி காலமானார்

கொழும்பு, நவ. 10

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பில் படுகாயங்களுக்குள்ளாகிய ஸ்ரீலங்கா மக்கள் கட்சியின் ஒரு பிரிவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஓஸி அபேகுணசேகரா கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் நேற்றுப் பற்பகல் காலமானார்.



கடந்த 23 ஆம் திகதி நடைபெற்ற குண்டு வெடிப்பில் காயமுற்ற இவர் 17 நாட்களாக நினைவு திரும்பாத நிலையில் நேற்றுப் பிற்பகல் காலமானார்.

ஓஸி கடந்த பொதுத் தேர்தலில் — கொழும்பு மாவட்டத்தில் — ஐ. தே. க. வேட்பாளராகப் போட்டியிட்டு எம். பியாகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். (உ-3)

## வெற்றிலைக்கேணித் தாக்குதலில் அதிகாரி உட்பட 4 படையினர் பலி!

மணிலா, நவ. 10

வெற்றிலைக்கேணி இராணுவ முகாம் மீது நேற்று அதிகாலை விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் நடத்திய பிரங்கித் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இவர்களில் ஒருவர் இராணுவ அதிகாரியாவார்.

கொழும்பு பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி ஏஜென்ஸிகள் இத்தகவலை வெளியிட்டன. ஜனாதிபதித் தேர்தலன்று இத்தாக்குதல் நடத்தப்பட்டதை அவை சுட்டிக்காட்டின. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பத்து மாதங்கள் நிரம்பிய பெண் பொமனேரியன் நாய்க்குட்டியும், பாவிக்காத புத்தம் புதிய ஏஷியா ஆண்கள் சைக்கிளும், பாவித்த ஏஷியா ஜப்பான் சைக்கிளும் விற்பனைக்குண்டு. கனகசிங்கம், இல. 214, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
(33691)

### காணி விற்பனைக்கு

யாழ். மாநகரசபை எல்லைக்குள் பாதுகாப்பு வலையத்துள் போதனா வைத்தியசாலைக்குப் பின்னால் விக்ரோறியா வீதியில் சுபாஷ் ஹோட்டலுக்குப் பக்கத்தில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்குண்டு. 55, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(33704)

### விசேஷ கழிவு

இலகு தோசை மா, இட்லி மா, அப்பம் மா ஆகிய வற்றை எம்மிடம் மொத்தமாகக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் முன்கூட்டியே ஒழுங்குசெய்து விசேஷ கழிவைப் பெற்றுக்கொள்ளுங்கள். தொடர்பு: சகல அண்ணா தொழிலக கிளைகளிலும். (சி-9597)

### நாளை வியாழ மாற்றம்

11-11-94 வியாழமாற்றமும், சந்திரிகா முதற்பெண் ஜனாதிபதியாக 40 இலட்சம் வாக்குகளுக்கு மேல் அமோக வெற்றிப் பிரகடனமும் ஏற்படும். சமாதானமும் அமைதிப் பேச்சுகளும் தொடரும். Prof. T. சத்யதாசன் கட்டுடை. (7802)

### சோதிடம்

சாதகம் எழுத எத்தகைய தீராத பிரச்சினைகளும் திர கல்வி, விவாக, தொழில் தடைகள் நீங்க சாந்தி பரிகாரங்கள்கூறப்படும். சாதகத்துடன் வரவும். ஸ்ரீ மாவை விநாயகர் சோதிட நிலையம், இல. 158, கோயில் வீதி, நல்லூர். (33695)

### றேடியோக்கள் திருத்துதல்

சகல கசட்றேடியோக்கள், T. V., டெக், கார் கசற்றுக்கள் மற்றும் ஒட்டோமற்றிக் எலெக்றொனிக் மேசை, சுவர், கைக்கடிகாரங்களை சிறந்த முறையில் திருத்திக் கொள்ள டில்கா வாச் அன் றேடியோ வேக்ஸ். 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்), கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. மானிப்பாய், ஆனைக்கோட்டை.
(சி-9616)

### மணிக்கூடுகள் திருத்துதல்

சகல எலெக்றொனிக் சுவர், மேசை, ஒட்டோமெற்றிக், கடிகாரங்களையும் மற்றும் கசற் றேடியோக்கள், T. V., டெக், கார் கசற்றுக்களையும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ள, டில்கா வாச் அன் றேடியோ, வேக்ஸ் 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (வானவில் அருகில்), கிளை: கண்டி றோட், சாவகச்சேரி. மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை.
(சி-9617)

### தவறிவிட்டது

இக்னேசியஸ் விவேகானந்தன் ஆகிய எனது 722352769V இலக்க அடையாள அட்டை 27-10-94இல் செட்டித்தெரு குறுக்கு ஒழுங்கையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இல. 545, பருத்தித்துறை வீதி, நல்லூர் என்னும் விலாசத்தில் ஒப்படைக்கவும். (33680)

**A/L**
**DAY CLASS**
ஆரம்பமாகியுள்ளது
வர்த்தகம்
**Mr. பசில்**
(A/L 94 பரீட்சை எடுத்த மாணவர்களுக்குரியது)
**SHAMROCK**
யாழ். சுண்டிக்குளி
[33701]

---

பருத்தித்துறை
ப. நோ. கூ. சங்க
## கிளைக்குழு தேர்தல்-1994

பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கத்தின் 26 கிளைகளுக்கான கிளைக்குழுத் தேர்தல் வேட்புமனுக்கள் 17-11-94 வியாழக்கிழமை முற்பகல் 9.00மணிக்கும் முற்பகல் 10-00மணிக்கும் இடையில் அவ்வக்கிளை நிலையங்களில் உதவித் தேர்தல் உத்தியோகத்தரால் ஏற்றுக்கொள்ளப்படும். வாக்களிக்க தகுதி பெற்ற அங்கத்தவர்கள் ரூபா10/-ஐச் செலுத்தி உரிய நியமனப்பத்திரங்களை அவ்வக்கிளைகளில் பெற்று அவற்றை பூரணப்படுத்தி உதவித்தேர்தல் உத்தியோகத்தர்களிடம் கையளிக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

சு. வாமதேவன்,
தேர்தல் உத்தியோகத்தர்,
பருத்தித்துறை.

பிரதேசச் செயலகம்,
வடமராட்சி வடக்கு,
பருத்தித்துறை.
09-11-1994
(சி/9653)

---

## முக்கிய அறிவித்தல்

யாழ். மாவட்டத்திலுள்ள சகல தனியார் கல்வி நிறுவன இயக்குநர்களுக்கும், பிரத்தியேக வகுப்பு ஆசிரியர்களுக்குமான

### விசேட கலந்துரையாடல்

இடம்: யாழ். புதிய விஞ்ஞான கல்வி நிலையம்
காலம்: 11-11-94 (வெள்ளி) பி. ப. 3-4மணி

யாழ். மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் கலந்துரையாடவுள்ளார்.

குறிப்பு:

அன்றையதினம் யாழ். மாவட்டம் முழுவதும் மாலை நேரம் விடுமுறையாகும்.

அன்று கலந்து கொள்ளாதவர்கள் மீது தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட இருப்பதால் தவறாதுகலந்து வீணான சிரமங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

த. க. நிறுவன ஒன்றியம்.
பொதுச் செயலாளர்,
யாழ். மாவட்டம்.
(சி/9651)

---

## பிரதமர் சந்திரிகாவே இலங்கையின் முதற்பெண் ஜனாதிபதி

(மகரராசி - கடகலக்கினம்)

| | | | |
|---|---|---|---|
| 9 | சு, செ | 11 | பு, கு, சனி, ரா |
| 8 | (இராசி) (உத்தராடம்) சந்திரிக்காவின் ஜனனக்குறிப்பு | | ல |
| சந் | | | வி |
| கே | 5 | 4 | 3 |

தற்போது [illegible] தெசையில் / வெள்ளி புத்தி (10இல் செவ்வாயுடன் திக்கு பலமும், உச்ச யோகமும்) ஜனாதிபதியாக சந்திரிக்காவுக்கு அமோக வெற்றியைக் கொடுக்கும்.

Prof:
T. சத்தியதாஸன்
(கட்டுடை)
[7801]

---

## 31-ம் நாள் நினைவஞ்சலி



**சபாபதி செல்லக்கண்டு**

தோற்றம்: 21 — 08 — 1920
மறைவு: 11 — 10 — 1994

அன்பிலே தெய்வமாய், எமையெல்லாம் ஆதரித்து அரவணைத்து வந்த பெருந்தகையே உங்கள் பிரிவால் நாம் ஆறாத்துயர் அடைகின்றோம்.

11-10-94 அன்று சிவபதமடைந்த வீட்டுத்தலைவர் அவர்களின் இறுதிச் சடங்கிலும் இது தொடர்பான கிரியைகளிலும் கலந்து சகல விதத்திலும் அனுதாபம் தெரிவித்த உற்றார், உறவினர், அன்பர்கள் எல்லோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவரின் ஆத்ம சாந்திக்காக இன்று (10-11-94) வியாழக்கிழமை பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் சமண்டீகரணத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

---

# ஈழத் தமிழர்கள் மீது தமிழகத்தில் கெடுபிடி

கொழும்பு, நவ. 10
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்புச் சம்பவத்தைத அடுத்து தமிழ் நாட்டில் பாதுகாப்புப் பிரிவினர் அங்கு நடமாடும் ஈழத்தமிழர்கள் தொடர்பாக பெரும் அவதானத்துடன் இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அங்கு தனது பிள்ளையின் கல்விக்காக சென்றிருந்த இலங்கை — இந்திய வம்சாவழி பெண் ஒருவரும் இச்சம்பவத்தை அடுத்து குறிப்பிட்ட காலத்துக்கு முன்னதாக இங்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

தமிழகப் பொலீஸில் தம்மை பதிவு செய்யாத இலங்கையர் அங்கு இருந்து அனுப்பிவைக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பலாத்துறை குண்டு வெடிப்புடன் தொடர்புடையவர்கள் தமிழகத்தில் ஊடுருவியிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுவதாலேயே தமிழகத்தில் இந்த நிலை உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# கொழும்பு குண்டு வெடிப்பு வத்தளையில் 6தமிழர் கைது

கொழும்பு, நவ. 10
கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பாக வத்தளைப் பகுதியில் தேடுதல் நடத்திய பொலீஸார் அங்கு 6 தமிழர்களை கைது செய்தனர் என்று அறிவிக்கப்படுகின்றது.

கிராண்ட்பாஸ் குண்டு வெடிப்பு தொடர்பான திட்டங்கள் வத்தளைப் பகுதியில் தீட்டப்பட்டதாக கிடைத்த தகவலையடுத்து வத்தளையில் தமிழ் மக்கள் வதியும் நாயகந்தை, அல்விஸ் டவுண் ஆகிய பகுதிகளிலேயே தேடுதல் நடத்தப்பட்டது.

துப்பாக்கி ரவைகளும் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# புதிய எம். பிக்கள் விவரம்

கொழும்பு, நவ. 10
முன்னாள் உணவு, கூட்டுறவுத்துறை அமைச்சர் வீரசிங்க மல்லிமாராச்சி காலமானதால் ஏற்பட்டுள்ளநாடாளுமன்ற ஆசன வெற்றிடத்துக்கு — கொழும்பு மாவட்டத்தில் ஐ.தே.க.பட்டியலில் போட்டியிட்ட திரு.ஆர். யோகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவரது நியமனம் தொடர்பாக தேர்தல் ஆணையாளர் வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கண்டி தேர்தல் மாவட்டத்தில் காமினி திஸாநாயக்காவின் வெற்றிடத்துக்கு காமினி ராஜபக்ஸ நியமிக்கப்பட்டுள்ளார்.

ஒஸி அபேகுணசேகரா நேற்றுக் காலமானதால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்துக்கு கொழும்பு மாவட்ட ஐ.தே.க. பட்டியலில் மற்றொருவர் நியமிக்கப்படவிருக்கிறார். (உ-3)

# யாழ். புதிய அரச அதிபர் நியமனம் அடுத்த வாரமே!

யாழ்ப்பாணம், நவ. 10
யாழ். மாவட்டத்துக்கான புதிய அரச அதிபர் யார் என்பது அடுத்த வாரமே தெரிய வரும் என்று அறியப்படுகிறது.

யாழ்.மாவட்ட அரச அதிபராகப் பணியாற்றிய திரு. கா. மாணிக்கவாசகர் சுகவீனம் காரணமாக பதவியில் இருந்து விலகியதையடுத்து புதிய அரச அதிபர் ஒருவரை நியமிக்க பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளர் ஒஸ்டின் பெர்னாண்டோ நடவடிக்கை எடுத்துள்ளார்.

கிளிநொச்சி அரச அதிபராகப் பணியாற்றும் திரு. கே. பொன்னம்பலத்தை யாழ்ப்பாணத்தின் அரச அதிபராக திரு. ஒஸ்டின் பெர்னாண்டோ ஜனாதிபதி விஜேதுங்காவுக்கு சிபார்சு செய்திருந்தார் என்றும்—

புதிய ஜனாதிபதி ஒருவர் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் அந்த நியமனத்தை வழங்குமாறு விஜேதுங்கா பதில் ஆலோசனை தெரிவித்தார் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

அதனால் புதிய ஜனாதிபதி தெரிவான பின்னரே யாழ். அரச அதிபர் நியமனம் இடம்பெறும் என்று தெரிவிக்கப்படுகிறது. (அ-3)

## முறைசாரா போதனாசிரியர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், நவ. 10
யாழ். கல்வித் திணைக்களம் வலயம் இரண்டின் முறைசாராக் கல்விப் பிரிவு போதனாசிரியர்களுக்கும், அதிபர்களுக்குமான பயிற்சிக் கருத்தரங்கு நாளை கோப்பாய் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. காலை 8.30 மணி தொடக்கம் இக் கருத்தரங்கு நடைபெறும். (அ)

## இன்று பரிசளிப்பு

யாழ்ப்பாணம், நவ. 10
இணுவில் இந்துக் கல்லூரி பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திரு.சு. தம்பித்துரை தலைமையில் நடைபெறும்.

முன்னாள் பிரதேசக் கல்விப்பணிப்பாளர். திரு இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி தேவராணி சுந்தரலிங்கம் பரிசில்களை வழங்குவார். (உ-3)

## கிராம உத்தியோகத்தர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், நவ. 10
சாவகச்சேரி, பளை பிரதேசசெயலகங்களைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களுக்கான கலந்துரையாடல் இன்று வியாழன் மாலை 3.00 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் நடைபெறும்.

அனைத்து கிராம உத்தியோகத்தர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி தமிழீழ நிர்வாக சேவையினர் கேட்டுக்கொள்கின்றனர். (இ)

---

வலிகாமம் தெற்கு பிரதேசசபை - சுன்னாகம்
## அறிவித்தல்

### கொத்தியாலடி இந்து மயான அபிவிருத்திச் சங்கம், சுன்னாகம்.

கொத்தியாலடி இந்து மயானத்தைப் பராமரிப்பதற்காகவும் அபிவிருத்தி செய்வதற்காகவும் மேற்படி சங்கம் பொறுப்பாகவுள்ளது என்பதனை பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்.

1995—01—01 ஆம் திகதி முதல் இம் மயானத்தில் தகனம் செய்வதற்கு பின்வரும் கட்டணங்கள் அறவிடப்படும். உரிய கட்டணங்களை தகனம் செய்வதற்கு முன்னர், சங்கப் பொருளாளரிடம் செலுத்தி, உரிய பற்றுச்சீட்டை இரு பிரதிகளில் பெற்று, 2 ஆம் பிரதியை மயானக் காவலாளியிடம் ஒப்படைத்தல் வேண்டும். மேலதிக விவரங்களை சுன்னாகம் புகையிரத நிலைய வீதியில் 95 ஆம் இலக்கத்தில் இயங்கும் சங்கப் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| 1. | தகனம் செய்வதற்கு (விறகு அடுக்கல், எரித்தல், மேற்பார்வை உட்பட) | ரூபா. 250.00 |
| 2. | காடாற்றுவதற்கு (உதவி உட்பட) | ,, 100.00 |
| 3. | கிடங்கு வெட்ட:- | |
| | 1. 6' x 3' x 4' | ,, 500.00 |
| | 2. 3' x 3' x 4' | ,, 300.00 |
| | 3. 5' x 5' x 4' — மாடு | ,, 500.00 |
| | 4. 4' x 4' x 4' — சமாதி | ,, 400.00 |
| 4. | பிரேத வண்டி வாடகை:- | |
| | 1. அங்கத்தவர்களுக்கு | ,, 100 00 |
| | 2. அங்கத்தவர் அல்லாதவர்களுக்கு | ,, 200.00 |
| 5. | பிரேதவண்டி தள்ளிச் சென்று விட (ஒரு முறை மட்டும்) | ,, 100.00 |

இந்த மயானத்தைப் பாவிப்பவர்கள் தங்கள் ஒத்துழைப்பைச் சங்கத்திற்கு வழங்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

ஆ. மகாலிங்கம்
விசேட ஆணையாளர்
வ. தெ. பி. சபை.

வலிகாமம் தெற்கு பிரதேசசபை,
சுன்னாகம்.
08—11— 994.
[சி/5735]

---

## முக்கிய கலந்துரையாடல்

பருத்தித்துறை பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிளைக்குழுத் தேர்தலுக்கான கலந்துரையாடல் 14 – 11 – 1994 திங்கட்கிழமை காலை 9–00 மணிக்கு சங்கத் தலைமை அலுவலகத்தில் நடைபெறும். தமிழீழ நிர்வாக சேவை கூட்டுறவுப் பகுதியினர் கலந்து கொண்டு உரையாற்ற இருப்பதால் கிளைக்குழு உறுப்பினர்கள், கூட்டுறவு நலன் விரும்பிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

மு. கனகசபாபதி,
தலைவர்,
பரு. ப.நோ.கூ. சங்கம்.
[சி-9654]

---

## வெளிவந்துவிட்டது!

"சந்ரிக்கா அரசும்
இனப்பிரச்சினைக்கான தீர்வும்"
விஞ்ஞான ரீதியிலான ஆராய்வு!
படியுங்கள்
விவாதியுங்கள்
தெளிவை ஏற்படுத்துங்கள்!

கிடைக்குமிடம்:
**பூபாலசிங்கம் பொத்தகசாலை**
யாழ்ப்பாணம்.

**INSTITUTE OF POLITICAL STUDIES UDUVIL.**
(சி-9598)

---

## G. A. Q. 96
(பேராதனை)

★ மேற்கூறப்பட்ட பாட நெறிக்கான விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்தினால் கோரப்பட்டுள்ளன.

★ A/L இல் 180 புள்ளிகளுக்குக் குறையாத புள்ளிகளை பெற்றுக் கொண்டவர்களும், பயிற்றப்பட்ட ஆசிரியர்களும் விண்ணப்பிக்கலாம்.

★ இதற்கான பல்கலைக்கழக பதிவுகள் எமது நிறுவனத்தினால் செய்து தரப்படும்.

★ விரிவுரைகள் ஆரம்பம்:- **12-11-94**

விவரங்களுக்கு:
**S. அருள்நங்கை**
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.
[சி/9618]

---

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ். கோட்டம்
பொதுச் சபைக் கூட்ட
## அறிவித்தல்

காலம்: 11-11-1994 வெள்ளி மாலை 4 மணி
இடம்: புதிய விஞ்ஞானக் கல்வி நிலையம்
(எழிலகம் முன்பாக)

நிகழ்ச்சி நிரல்:

1. அகவணக்கம்
2. செயலாளர் அறிக்கை
3. பொருளாளர் அறிக்கை
4. புதிய நிர்வாகிகள் தெரிவு

கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்

செயலாளர்
யாழ். கோட்டம்.
(சி- 9600)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## நன்றே செய்க

இலங்கையின் மூன்றாவது ஜனாதிபதித் தேர்தல் நேற்று அமைதியாக நடந்தேறியுள்ளது. ஆங்காங்கே சிறுசிறு தேர்தல் வன்செயல்கள் நடந்தபோதிலும், பெரிய அளவில் குழப்பம் எதுவும் இடம்பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய தேர்தலில் வெற்றிபெற்று, நிறைவேற்று ஜனாதிபதியாக அரச பீடம் ஏறி கோலோச்சப் போகும் நான்காமவர் ஒரு பெண்ணாக — ஒரு கைம்பெண்ணாக — இருப்பார் என்பது ஏற்கனவே தெரிந்த ஒன்று. ஆனாலும் நான்காவது ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டவர் யார் என்பது இன்னும் சில மணித்தியால நேரத்தில் உத்தியோக பூர்வமாகத் தெரிந்துவிடும்.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவே புதிய — நான்காவது — ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார் என்பது உத்தியோகப்பற்றற்ற முடிவாகும். அது ஊர்ஜிதமாகும் போது நாட்டின் முழுத் தலைமைப் பொறுப்பும் அவர் தலைமீது வந்து விழும். அந்தப் பொறுப்பை, புதியவர் எவ்வாறு நிறைவேற்றப் போகிறார்; என்னென்ன புதிய மாற்றங்களைக் கொண்டு வரப்போகிறார்; நாட்டின் முக்கிய பிரச்சினைகளை எவ்வாறு கையாள்வார்; இருள் சூழ்ந்திருக்கும் மக்கள் வாழ்வில் ஒளியூட்டுவாரா; மக்கள் தங்களுக்குள்ள சுதந்திரங்களைச் சரிவர அனுபவித்து நிம்மதியாகவும் வளமாகவும் வாழ்வதற்கு வழிசெய்வாரா என்று பல வகையான கேள்விகள் எழுகின்றன.

இவை எல்லாவற்றிலும் சந்திரிகா உடனடியாகக் கையாண்டு துரிதமாகச் செயற்பட வேண்டிய இரண்டு விவகாரங்கள் உள்ளன. இனப்பிரச்சினைக்கு உகந்த அரசியல் தீர்வு ஒன்றைக் காண்பதும், நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறையை நீக்குவதுமே அந்த இரு விவகாரங்களும் ஆகும். இந்த இரண்டையும் செய்து முடிப்பதற்கு அவர் கடந்த பொதுத் தேர்தலில் மக்களிடம் ஆணை கேட்டார். இம்முறையும் ஆணை கேட்டிருந்தார்.

ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகா வெல்லும் பட்சத்தில், இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு; நிறைவேற்று ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு ஆகிய இரண்டுக்கும் மக்கள் ஆணை மீண்டும் கிடைத்ததாகிவிடும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படாததால் நாட்டில் இரத்த ஆறு ஓடிக்கொண்டிருக்கிறது. போருக்காக நாட்டின் நிதி வளம் தேய்ந்துகொண்டிருக்கிறது. எனவே அதனைத் தீர்ப்பதிலேயே உடனடிக் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டாக வேண்டும்; அதற்கு அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்று கூறுமளவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியும் வந்திருக்கிறது. ஆனால் அந்தத் தீர்வு எவ்வாறு அமைய வேண்டும்; தீர்வைக் காண்பதற்கான நடைமுறை அணுகுமுறை எவ்வாறு இருக்க வேண்டும் என்பவற்றை எவரும் சொல்வதாகவோ, செய்வதாகவோ இல்லை.

ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர், இனியும், அத்தகைய வெற்று நிலை இருக்கக்கூடாது. தமிழர் பிரச்சினைக்கான தீர்வு என்ன, தீர்வைக் காண்பதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ள வழிமுறை என்ன, என்பன அறிவிக்கப்பட்டு, உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும்.

சந்திரிகா பிரதமராக இருந்தவேளை, விடுதலைப் புலிகளுடன் தொடங்கப்பட்ட சமாதான முயற்சிகள் மீள்விக்கப்பட வேண்டும். பேச்சுவார்த்தைக்குச் சாதகமான சூழ்நிலையை உருவாக்குவதற்குத் தேவையான போர் நிறுத்தம் உடனடியாக நடைமுறைக்கு வர வேண்டும். இராணுவம் விரும்பவில்லை, அவர்களை கலந்தாலோசிக்க வேண்டியுள்ளது என்பன போன்ற காரணங்களைக் காட்டிக் காலத்தைக் கடத்தக்கூடாது.

நன்றே செய்க; அதனையும் இன்றே செய்க — என்ற பொன்மொழியை புதிய ஜனாதிபதிக்கு ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

---

சர்ச்சைக்குரிய ஏ. என். 32ரக விமான கொள்வனவு விவகாரம்:

# பாதுகாப்பு உயர் நிலை அதிகாரிகள் இருவர் ரஷ்ய ஆயுதக் கம்பனியுடன் ரகசியத் தொடர்பு

## தொலைபேசி உரையாடல் அம்பலம்

கொழும்பு, நவ. 10

ரஷ்யாவில் இருந்து மூன்று ஏ. என் 32 ரக விமானங்களைக் கொள்வனவு செய்வது தொடர்பாக எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகளை அடுத்து —

பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்த இரண்டு உயர்நிலை அதிகாரிகள் ரஷ்யாவில் உள்ள ஆயுதக் கம்பெனியினருடன் நடத்திய இரகசியத் தொலைபேசி உரையாடல் தெரிய வந்துள்ளது. புதிய பிரச்சினையை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய ஆயுத உற்பத்தியாளருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட இரண்டு அதிகாரிகளில் ஒருவர் பாதுகாப்பு அமைச்சைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் விமானப் படையைச் சேர்ந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

முன்னர் நிர்ணயிக்கப்பட்ட விலைகளிலும் பார்க்க குறைந்த விலைக்கு இவ்விமானங்களை விற்க வேண்டாம் என்று இவ்விரு இலங்கை அதிகாரிகளும் ரஷ்ய ஆயுத நிறுவனத்தைத் தொலைபேசி மூலம் கேட்டுக்கொண்டனர்.

எப்படியும் இம்மூன்று விமானங்களையும் இலங்கை அரசு வாங்கியே ஆகும் என்றும் இந்த அதிகாரிகள் ரஷ்ய நிறுவனத்துக்கு உறுதியளித்துள்ளனர் என்ற தகவலும் இப்போது வெளியாகியுள்ளது.

இவ்விமானங்கள் ஒவ்வொன்றையும் 45 லட்சம் அமெரிக்க டொலருக்கு விற்க ரஷ்ய நிறுவனம் முன்னர் முன்வந்திருந்தது.

உண்மையான கொள்வனவு விலை 30 லட்சம் அமெரிக்க டொலர்கள் என்று கொழும்பில் அதிகார பூர்வவட்டாரங்கள் குற்றஞ்சாட்டியுள்ளன. உதிரிப்பாகங்களுக்கும் சேர்த்துக் கணக்கிட்டால் விமானம் ஒன்றின் விலை 35 லட்சம் அமெரிக்க டொலர் ஆகிறது என்றும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன,

எதிர் காலத்தில் ஆயுதக் கொள்வனவுகள் இரு அரசாங்கங்களுக்கு இடையில் அல்லது கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்டே மேற்கொள்ளப்பட வேண்டும் என்று பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

இதனை அடுத்தே இவ்விரு அதிகாரிகளும் ரஷ்ய நிறுவனத்துடன் இரகசியமாக தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்ட விலையை குறைக்கக் கூடாது என்று கோரியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

புதிய ஜனாதிபதி விரைவில் பதவிக்கு வருவதை அடுத்து இந்த இரண்டு உயர் நிலை அதிகாரிகளின் எதிர்காலம் எப்படி அமையக் கூடும் என்பது குறித்து ஊகங்கள் எழுந்துள்ளன என்றும் —

அடுத்த சில தினங்களில் பரபரப்பான நடவடிக்கைகள் இடம்பெறலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாகவும் தகவலறிந்த வட்டாரங்களை மேற்கோள்காட்டி ''த ஐலண்ட்'' செய்தி வெளியிட்டிருக்கிறது. (ஐ-ஏ)

# முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே விரைவில்ஐ.தே.கட்சியில்இணைவார்!

முன்னாள் அமைச்சர் சிறிசேன கூரே ஐ. தே. க. தேசியப்பட்டியல் எம். பியாகவும், ஐ. தே. க. நிறைவேற்றுக் குழு உறுப்பினராகவும் நியமிக்கப்படும் வாய்ப்புஉருவாகியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எதிர்க்கட்சித் தலைவரான ரணில் விக்கிரமசிங்கா நாளை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப்பதவியை எற்ற பின்னர், கட்சிக்குள் இருக்கும் விரும்பத்தகாதவர்களை வெளியேற்றும் முயற்சி மேற்கொள்ளப்படவிருப்பதாகவும்—

அதன் ஒரு கட்டமாக சிறிசேன கூரேயை கட்சிக்குள் மீண்டும் கொண்டு வரும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அரசியல் வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது ஐ.தே.க. தேசியப்பட்டியலில் வெற்றிடமாக உள்ள இரண்டு இடங்களில் ஒன்றுக்கு சிறிசேன கூரே நியமிக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த காலி இடங்களில் ஒன்றுக்கு ஹேமாவை நியமிக்கும்படி சிறிமா திஸநாயக்கா விடுத்த கோரிக்கையை ஜனாதிபதி விஜேதுங்கா புறக்கணித்து விட்டார் என்பது தெரிந்ததே. (ஐ-எ)

# முன்னர் எப்போதும் இல்லாதவாறு தமிழிலும் சுவரொட்டிகள், பதாகைகள்

கொழும்பு, நவ. 10

இம்முறை ஜனாதிபதித் தேர்தலில், முன் எப்போதும் இல்லாதவாறு பெரும் அளவில் தமிழிலும் சுவரொட்டிகளும், பதாகைகளும் காணப்பட்டன.

சிறுபான்மை மக்கள் வாழும் பகுதிகளில் குறிப்பாக மத்திய மலைநாடு மற்றும் தாழ்ந்த பிரதேசங்களில் உள்ள தோட்டப் பகுதிகளில் பெரும் அளவில் தமிழில் சுவரொட்டிகளும், பதாகைகளும் காணப்பட்டன.

''சமாதானத்துக்கும் இன ஐக்கியத்துக்கும் சந்திரிகா'' என்று கூறும் பெருவாரியான பதாகைகள் தோட்டப் புறங்களை அடுத்துள்ள நகரங்களில் பிரதமர் சந்திரிகாவின் படத்துடன் காணப்பட்டன. (இ)

## விளையாட்டு நிகழ்வு

யாழ்ப்பாணம், நவ. 10

யாழ். மாவட்ட பாடசாலைகள் விளையாட்டு அபிவிருத்திக்குழு நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 2 மணி முதல் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

யாழ். மத்திய கல்லூரியில்

★ 17 வயது:- ஹாட்லி எதிர் வட்டு. திருநாவுக்கரசு வித்தி.

★ 19 வயது:- ஹாட்லி எதிர் இனுவில் மத்திய கல்லூரி

யாழ். இந்துவில்

★ 17 வயது:- புங்குடுதீவு ம. வி. எதிர் சென் சார்ள்ஸ் ம. வி., வல்வை சிவகுரு வித்தி எதிர் வேலணை சேர். வை. துரைசுவாமி ம ம.வி., கலட்டி றோ. க. எதிர் சென். ஜோசப் வித்தி. (உ-20)

## தொலைக் கல்வி ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம், நவ 10

நல்லூர் தொலைக் கல்வி நிலையத்தைச் சேர்ந்த போதனாசிரியர்கள் மற்றும் பயிலுநர் ஆசிரியர்கள் அனைவரையும் எதிர்வரும் சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களும் காலை 8.30 மணிக்கு மத்திய நிலையத்தில் சமுகமளிக்குமாறு சிரேஷ்ட போதனாசிரியர் அறிவித்துள்ளார். (ஐ)

## துர்க்காபுரம் மகளிர் மன்ற ஆண்டு விழா

வலிகாமம் தெற்கு, நவ.10

தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் மன்றத்தின் 12ஆவது ஆண்டு விழா சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஆசியுரை வழங்கினார். பிரதிக் கல்விப்பணிப்பாளர் திரு. சு. இரத்தினராசா பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தினார். திரு. ஆறு. திருமுருகன் பரிசளிப்பு உரையை நிகழ்த்தினார். மகளிர் இல்ல மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. (சு-152)

# சம்பந்தப்பட்டோர் இணங்கினால் நியாயமான அடிப்படையில் தீர்வு

## ஜனாதிபதி என்ற முறையில் டி.பி.இறுதிவேண்டுகோள்

கொழும்பு, நவ. 10

சம்பந்தப்பட்டோர் நியாயமான அடிப்படை ஒன்றின் மூலம் தீர்வுக்கு வர இணங்குவார்களேயானால் இனப் பிரச்சினையை சினேகபூர்வமாகத் தீர்க்கமுடியும்.

— இவ்வாறு தெரிவித்திருக்கிறார் பதவியை விட்டு விலகிச் செல்லும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க.

தாம் பதவி விலகிச் செல்வதை ஒட்டி நேற்றிரவு வானொலி — தொலைக்காட்சி ஆகியவை மூலம் மக்களுக்கு அவர் உரை நிகழ்த்தினார். அந்த உரையில் அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:

வடக்கில் நடைபெறும் யுத்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படவேண்டும் என்பது எனது அவாவும், பிரார்த்தனையுமாகும். யுத்தம் ஒரு முடிவுக்கு வந்தால் சமாதானமும், அமைதியும், சுபீட்சமும் நிலவும் ஒரு யுகம் உதயமாகும். அது நாட்டின் இறைமையையும், ஐக்கியத்தையும், ஆள்புல ஒருமையினையும் பேண உதவும்.

ஜனநாயக முறையில் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்தை ஆயுத பலத்தைக் கொண்டு கவிழ்ப்பதற்கு முயன்ற — தவறான வழியில் இட்டுச் செல்லப்பட்ட — இளைஞர்கள் சிலரால் கட்டவிழ்க்கப்பட்ட — என்றுமே காணாத — பயங்கரவாதம் தலைதூக்கிய காலகட்டத்தில் இருந்து நாடு விடுதலை பெற்று வந்த ஒருவேளையில் தான் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸா கொலை செய்யப்பட்டார்; நான் பதவியேற்கும் நிலை ஏற்பட்டது.


இக்காலப் பகுதியில் வடபகுதியில் பயங்கரவாத வன்முறைகள் தொடர்ந்தன.

அந்த வன்முறைகள் அக்கால அரசாங்கம் போராளிகளுடன் நடத்திய சமாதானப் பேச்சுக்கள் நிலவிய சிறுகாலத்தில் இடம்பெறவில்லை என்பது உண்மை.

எமது நாட்டில் [illegible] அதிகம் என்பதும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட உண்மை.

வனப்பும் வளமும் மிக்க எமது நாட்டில் பயங்கரவாதம் இன்றும் பூதாகாரமாகத் தாண்டவமாடுவது கவலைக்குரியது.

எனது பதவிக்காலத்தில் பிரிவினையை நாடிச்செல்லும் பயங்கரவாதத்துக்கு எதிராக நாட்டின் அரசமைப்பை என்னால் இயன்ற



டி. பி. விஜேதுங்கா

அளவு பேணிக் காப்பதற்கு நடவடிக்கை எடுத்தேன்.

வடக்கில் நீண்ட காலமாக நிலவி வருகின்ற பயங்கரவாதம் ஆயிரக்கணக்கான உயிர்களையும், சொத்துக்களையும் ஏப்பமிட்டுள்ளது; எமது அபிவிருத்தி முயற்சிகளையும் தடைசெய்துள்ளது.

சம்பந்தப்பட்டவர்கள் நியாயமான அடிப்படை ஒன்றின் மூலம் தீர்வுக்கு வர இணங்குவார்களாயின் மிகக் கசப்பான கருத்து வேறுபாடுகளைக்கூட சிநேகபூர்வமாகத் தீர்க்கமுடியும் என்று நம்புகிறேன்.

ஏனைய வழிகளை முழுமையாகப் புறக்கணித்துவிட்டு ஓர் தனிவழியை மட்டுமே பின்பற்றுவது புத்திசாலித்தனமானதல்ல என நான் கருதுகிறேன். சில வழிகள் பயனளிக்காதவிடத்து மாற்று வழிகள் பின்பற்றப்படக்கூடிய சாத்தியம் இருக்க வேண்டும் என்பதே எனது அனுபவம் தந்த பாடமாகும்.

ஜனாதிபதி இல்லத்தில் இருந்து விடைபெற்றுச் செல்லும் இந்த வேளையில் எமது படையினரும், பொலீஸ் சேவையினரும் ஆற்றிவருகின்ற கடமைக்காக எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### பொதுத் தேர்தலின் பின்

சமீபத்தில் இடம்பெற்ற பொது தேர்தலின் பின்னர் அரசியல் அமைப்பினால் என் மீது சுமத்தப்பட்டுள்ள அரசுத் தலைவருக்குரிய பாரிய கடமைகளை தொடர்ந்தும் நிறைவேற்றி வந்தேன்.

அமைச்சரவைக் கூட்டங்களுக்கும் நான் தலைமை தாங்கினேன். ஆனால் அது எனக்கு சற்று அசௌகரியமாகவே இருந்தது. எவ்வாறாயினும் பிரதமரும், அமைச்சு குறித்து ஒதுக்கப்படாத அமைச்சரும், ஏனைய அமைச்சர்களும் எனக்கு ஒத்துழைப்பும் உதவியும் அளித்தார்கள்.

அரசியல் விவகாரங்களில் முரண்பட்டவாறு நடந்து கொள்ளக்கூடாது என்ற எனது மன உறுதியுடன் மனக் கசப்பும் தவறான எண்ணமுமின்றி நான் பணிபுரிய இயலுமாயிற்று.

அமைச்சரவை அமைச்சர்கள் என் மீது காட்டிய நயமான பண்புக்கும், ஒத்துழைப்புக்கும் நான் கடமைப்பட்டுள்ளேன்.

எனது உத்தியோகபூர்வப் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வேளாண் மன்னர் போட்டி

வேளாண்மன்னர் போட்டிக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் நடத்தப்படும் வேளாண்மன்னர் தெரிவுப் போட்டிக்கு இம் மாதம் 30ஆம் திகதி வரை விண்ணப்பிக்கலாம் என தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் தெரிவித்துள்ளது.

முன்பு இம் மாதம் 10ஆம் திகதிக்கு முன்பதாக விண்ணப்பிக்குமாறு கேட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

லலித் கொலை தொடர்பான

# ஸ்கொட்லண்ட்யார்ட்டின் அறிக்கை நகைப்புக்குரியது

## அமைச்சர் கதிர்காமர் தெரிவிப்பு

கொழும்பு, நவ. 10

''லலித்அத்துலத்முதலி கொலை தொடர்பான 'ஸ்கொட்லண்ட் யார்ட்டின்' அறிக்கையை நானும் எனது சகாவான தயாபெரேராவும் ஆராய்ந்தோம். அது நகைப்புக்குரிய அறிக்கையாக இருந்தது. எனது 40 வருடகால சட்டத்துறை அனுபவத்தில் அதுபோன்ற ஒரு அறிக்கையை நான் பார்த்ததே இல்லை''.

வெளிவிவகார அமைச்சர் திரு. லஷ்மன் கதிர்காமர் முன்கண்டவாறு தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் அவர் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாஸா, கடற்படைத் தளபதி கிளான்ஸி பெர்னாண்டோ. அமைச்சர் ரஞ்சன் விஜேரத்னா ஆகியோரது கொலைகள் தொடர்பான விசாரணைகள் முழுமையாக நடைபெறவில்லை. அதனால் அவை தொடர்பான மக்கள் கருத்துக்கள் மேலோங்கியுள்ளன என்று அவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# 96 பேருக்கு நல்லூர் லயன்ஸ் இலவச மூக்குக் கண்ணாடி

யாழ்ப்பாணம், நவ. 10

நல்லூர் லயன்ஸ் கழகம் வறுமைக் கோட்டுக்கு உட்பட்டோருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கி வருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஒரு வைபவத்தில் நாயன்மார்கட்டு பாரதி மன்றம் சனசமூக நிலையம், நல்லூர் மூத்த விநாயகர் சனசமூக நிலையம், அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலையம், அரியாலை சிறி கலைமகள் சனசமூக நிலையம் ஆகியவற்றினூடாக விண்ணப்பித்த 96 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

நல்லூர் லயன்ஸ் கழகத் தலைவர் கே. துரைராசா, செயலாளர் செ. துரைசிங்கம், முன்னாள் தலைவர் வி. பரமசிவம் ஆகியோர் இந்த வைபவத்தில் கலந்து கொண்டு இலவச மூக்குக் கண்ணாடிகளை வழங்கினர். (இ)

## விசேட கலந்துரையாடல்

வலிகாமம் கோட்டத்துக்கு உட்பட்ட நடமாடும் மீன் வியாபாரிகளுக்கான (சைக்கிளில் மீன் வியாபாரம் செய்வோர்) விசேட கலந்துரையாடல் கொண்டாவிலில் உள்ள யாழ். மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நாளை வெள்ளி முற்பகல் 10 மணிக்கு நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## பயிற்சி கருத்தரங்கு

வடமராட்சிக் கோட்டத்தில் கரவெட்டி, பருத்தித்துறை, மருதங்கேணி பாடசாலைகளில் வாழ்க்கைத் திறன் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிக் கருத்தரங்கு நாளை முதல் 14 ஆம் திகதிவரை நெல்லியடி ம. ம. வியில் நடைபெறவுள்ளது. (ஐ-15)

## புலிகளின் குரல் வானொலியில்

**10 — 11 — 1994**

**வியாழன் இரவு**

- ★ 8-01 — செல்லுங்கள் பார்க்கலாம்
- ★ 8-10 — சித்தமருத்துவ குறிப்புகள்
- ★ 8-20 — உழைப்போம் உயர்வோம் — நிகழ்ச்சியில் ''கட்டடம் கட்டுவோம்'' குறுநாடகம்
- ★ 8 - 30 — செய்திகள்
- ★ 8-40 — ஏட்டிலிருந்து— தமிழில் சிறுகதையின் தோற்றமும்வளர்ச்சியும் என்ற நூலிலிருந்து ''இலங்கையில் தமிழ சிறுகதை'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
- ★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
- ★ 9-00 — மணிக்கு இரவு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

**11 — 11 — 1994**

**வெள்ளி காலை**

- ★ 7 - 02 — மாவீரவணக்கம்.
- ★ 7-30 — செய்திகள்
- ★ 7 - 35 — பத்திரிகைச் செய்திகள்.
- ★ 7-40 — தொடர்ந்து மாவீரவணக்கம்
- ★ 8-00 — மணிக்குகாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

## மயிலணியில் யமசங்கார உற்சவம்

யாழ்ப்பாணம், நவ. 10

சுன்னாகம், மயிலணி திருக்குடவாயில் ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை யமசங்கார உற்சவம் சிறப்பாக நடைபெற உள்ளது.

மாலைப் பூசை நாளை பி. ப. 3 மணிக்குத் தொடங்கும். யமசங்கார விழா பி. ப. 3- 30 மணிக்கு ஆரம்பமாகி மாலை 5-30 மணிவரை நடைபெறும்.

அதன் பின்னர் இரவு 7 மணிக்கு விசேட சொற்பொழிவுகளும் விசேட நாதஸ்வரக் கச்சேரிகளும் இடம் பெறும்.

விசேட நிகழ்ச்சிகளில் மாவை ஆதீனகர்த்தா மஹாராஜஸ்ரீ து. ஷண்முகநாதக் குருக்கள் ஆசியுரையும்—

சிவனருட் செல்வர் திரு. வ. குமாரசுவாமி, செஞ்சொற் கொண்டல் திரு. ஆறு. திருமுருகன் ஆகியோர் சிறப்புரைகளும்— நிகழ்த்துவர். (அ)

## கிணற்றில் விழுந்து சிறுவன் மரணம்

முகம் கழுவ கிணற்றில் தண்ணீர் அள்ளிய சிறுவன் தவறி விழுந்து மரணமானார்.

சுதுமலை அம்மன் கோயிலடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த சிவானந்தன் விக்னேஸ்வரன் (வயது 7) என்பவரே உயிரிழந்தவராவார்.

மரண விசாரணையின் பின் சடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது. (இ-15)

## டாக்டர் வருகை

வடமராட்சி, நவ.10

கொழும்பு. ஸ்ரீ ஜெயவர்த்தனபுர ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் பரபல சத்திர சிகிச்சை நிபுணரான டாக்டர் காமினி குணசேகரா எதிர்வரும் 17 ஆம் திகதி யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

யாழ்.பல்கலைக் கழக மருத்துவ பீடத்தினால் நடத்தப்படும் பரீட்சைகளின் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காகவே அவர் இங்கு வரவுள்ளதாகத் தெரியவந்தது. (ஐ-173)

## சைக்கிள் திருத்தும் பயிற்சி

வட்டுக்கோட்டை, நவ. 10

வலிகாமம் மேற்கு செஞ்சிலுவைச் சங்கக் கிளை துவிச்சக்கரவண்டி திருத்தும் நிலையம் ஒன்றை அமைத்து மூன்று பயிற்சியாளர்களுக்கு முதலில் பயிற்சி வழங்கவுள்ளனர்.

பயிற்சியாளர்களுக்கான ஊக்குவிப்பு நிதி உதவியை தேசிய தொழில் பயிலுநர் சபை வழங்கவுள்ளது. (க-161)

## 9மாத காலத்தில் 271 சிசு மரணம்

யாழ்ப்பாணம், நவ. 10

இவ்வாண்டில் கடந்த செப்ரெம்பர் வரையான காலப் பகுதியில் குடாநாட்டில் 271 சிசு மரணங்கள் நிகழ்ந்துள்ளதாக பிராந்திய சுகாதார பணிப்பாளர் அலுவலக புள்ளி விவரங்களில் இருந்து தெரிய வருகிறது.

இவற்றில் அதிகமானவை நிறை குறைவினால் ஏற்பட்ட மரணங்கள் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

**பனையை நட்டவர்கள் இப் பாரினில் உயர்ந்தவர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி திணைக்கள ஊழியரின் மனைவி, பிள்ளைகளுக்கு ஓய்வூதியம்

## புதியதிட்டம் தயாராகிறது

யாழ்ப்பாணம், நவ. 10

உள்ளூராட்சி சபைகளில் கடமை புரிந்து 1985 பெப்ரவரி 26 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெற்ற ஊழியர்களின் பின்னுரித்தாளிகளுக்கு விதவைகள், அநாதைகள் ஓய்வூதியத் திட்டம் ஒன்று நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக அமைச்சரவை தீவிரமாகப் பரிசீலனை செய்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகளில் பணிபுரிந்த போதிலும் உள்ளூராட்சி சேவையினைச் சாராத, அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளை வகித்த அந்தந்த நிறுவனங்களின் துணை விதிகளின் மூலம் ஓய்வூதியம் பெறுவோரின் பின்னுரித்தாளிகளுக்கே புதிதாக ஓய்வூதியத் திட்டம் தயாரிக்கப்படுகிறது.

26-03-1985க்கு முன்னர் ஓய்வுபெற்ற உள்ளூராட்சி சேவையினைச் சாராதவர்களின் சுயவிவரக் கோவையை திருகோணமலைக்கு அனுப்பி வைக்குமாறு வடக்கு-கிழக்கு மாகாணசபையின் உள்ளூராட்சி ஆணையாளர் வடக்கு-கிழக்கிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு 05-10-1994 இல் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கை ஒன்றின் மூலம் கோரியுள்ளார்.

இதன் அடிப்படையில் யாழ். மாநகராட்சி மன்றம் 26 - 03 - 1985ஆம் திகதிக்கு முன் கடமையாற்றி ஓய்வுபெற்ற ஊழியர்களின் விவரங்களைச் சேகரித்து வருகின்றது. இவ்வாறு யாழ். மாநகராட்சி மன்றத்தில் கடமையாற்றி ஓய்வு பெற்றவர்கள் இறந்திருப்பின் அவர்களின் கணவனோ அல்லது மனைவியோ அல்லது பிள்ளைகளோ அவர் தொடர்பான தகவல்களை யாழ். மாநகராட்சி மன்றத்துடன் தொடர்பு கொண்டு தெரிவித்தால் அவர்கள் ஓய்வூதியம் பெற வசதியாக இருக்குமென தெரிவிக்கப்பட்டது.

### அமைதி...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சர்வதேச நாடுகள் பாராட்டியுள்ளன.

இந்த இக்கட்டான வேளையில் சில சக்திகள் மக்களை தூண்டிவிட முற்படக் கூடும்.

இத்தகையோரின் முயற்சிக்கு செவிமடுத்து மக்கள் வழி தவறிச் செல்லக்கூடாது.

இந்த தீயசக்திகளுக்கு மக்கள் செவிமடுப்பார்களேயானால் முன்னைய அரசு தோற்றுவித்த அச்ச நிலைமையும், சமூக சீர்குலைவும் மீண்டும் தலைதூக்கும்.

இவ்வாறான வன்முறைகளை தூண்டி விடுபவர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸாருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்களில் ஈடுபடுபவர் மீது கட்சி வேறுபாடின்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த இரு தசாப்தங்களில் பல்வேறு கஷ்டங்களை எதிர்நோக்கிய மக்கள் தற்போது பெற்றுள்ள வெற்றி பாதுகாக்கப்படவேண்டும்— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ—3)

### மகாஜனா பரிசளிப்பு விழா

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் கனிட்ட பிரிவு பரிசளிப்பு விழா அண்மையில் அதிபர் திரு. க. நாகராசா தலைமையில் நடைபெற்றது.

பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. சி. வேலாயுதம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தியதுடன் மாணவர்களுக்கான பரிசில்களையும் வழங்கினார்.

### சம்பந்தப்பட்டோர்...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

பொருட்டு தம்மாலான சகல உதவிகளையும் மனமுவந்து அளித்த எனது செயலாளருக்கும், ஜனாதிபதி செயலக ஊழியர்களுக்கும் எனது தனி கவனிப்புப் பகுதி பணியாளர்களுக்கும் நன்றிகளைத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

நான் ஜனாதிபதிப் பதவியை வகித்த காலத்தில் என்னை ஆதரித்து ஊக்கமளித்த நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நன்றிகளைத் தெரிவிக்கின்றேன். (உ—ஐ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அந்தோனிப்பிள்ளை சூசானம்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், தற்பொழுது இல. 3, குருசோ வீதியில் வசிப்பவருமாகிய அந்தோனிப்பிள்ளை சூசானம் 09-11-94 அன்று இறைவனடி சேர்ந்து விட்டார்.

இவர் அச்சுவேலியைச் சேர்ந்த காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி ஞானம்மா, சவிரிமுத்து (செல்லத்தம்பி), பிரான்சிஸ்கா (மணி), பேபி ஆகியோரின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற வின்சன்ற் இராசதுரை, காலஞ்சென்ற பிரான்சிஸ் (இலங்கை வங்கி), மலர், மரியதாசன் (சிங்கம்) ஆகியோரின் மாமியாரும், அருள்ராஜ், போல்ராஜ் கலிஸ்ரன், றனிற்ரா, வெனிற்ரா, கலிஸ்ரா, டெனிஸ், வசி, கஷீசியஸ் அனுசா, பசிலா, பபியன், றெஜ்யன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் வினோத், கிறிஷாளினி, சாளின், மித்திலா, நித்திலன் ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (10 – 11 – 1994) மாலை 4 மணிக்கு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மணி (மகள்)

இல. 3, குருசோ வீதி,
யாழ்ப்பாணம்.

(33705)

### நாகலிங்கம் யோண் வயித்திலிங்கம்

(ஓய்வுபெற்ற வைத்தியசாலை பரிசாரகர்)

நெடுந்தீவு மத்தியைப் பிறப்பிடமாகவும் கிளிநொச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் யோண் வயித்திலிங்கம் 3-11-94 இல் இயற்கை எய்தினார்.

இவர் அமரர் இ. டானியல் நாகலிங்கம் – பொன்னம்மா தம்பதிகளின் புதல்வரும், நாகமுத்துவின் அன்புக் கணவரும், மகேந்திரராசா (இலங்கை மின்சார சபை, யாழ்ப்பாணம்), குகராசா (T. R. R. O. கிளிநொச்சி), அமரர் அரியராசா (தொலைத் தொடர்பு திணைக்களம்), பரமராசா (ஜேர்மனி), திருமதி கோணேஸ்வரி, திருமதி சாந்தீஸ்வரி ஆகியோரின் அன்புத்தந்தையும், புனிதலீலாவதி, லலிதாதேவி (கால்நடைத் திணைக்களம், கிளிநொச்சி), பவானி (ஜேர்மனி), புவனேந்திரராசா (பட்டினசபை, கிளிநொச்சி), சிறில் ஆகியோரின் மாமனாரும் அமரர் தம்பிஐயா (சின்னத்துரை), திருமதி எட்வட் அன்னபூரணம், தருமலிங்கம் திருமதி கனகராசா தங்கம்மா ஆகியோரின் சகோதரருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 84, ஜெயந்தி நகரில் 05-11-94 இல் நடைபெற்று, திருநகர், கிளிநொச்சியில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது என்பதை உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறோம்.

தகவல்:
வ. மகேந்திரராசா (மகன்)

93, சச்சேரி கிழக்கு ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.

(33709)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 10—11—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

### மரணம்

கோண்டாவில் பகுதியில் இளம் பெண் ஒருவர் கிணற்றில் விழுந்து மரணமானதாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மாவிட்டபுரம் தச்சன்காட்டுப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து கோண்டாவிலில் வசித்து வந்த தியாகராசா அன்னலட்சுமி (19 வயது) என்பவரின் சடலம் நேற்றிரவு யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

கிணற்றின் அருகில் கட்டியிருந்த ஆடு, இறந்த பெண் அதற்கு அருகில் சென்ற வேளை இடித்ததாலேயே அவர் கிணற்றில் விழுந்ததாகத் தாயார் தெரிவித்தார்.

சடலம் மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (அ-15)

## இனவாதத்தைக் கிளப்பிய பத்திரிகையாளர் கைது!

### பயங்கரவாதத் தடை சட்டத்தின் கீழ்

இனவாதத்தைக் கிளப்பும் வகையில் எழுதியதாகக் கூறப்படும் ''திரிசூல'' சிங்கள வார இதழின் ஆசிரியர் திலக் வேகல்ல பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார். பின்னர் அவர் பிணையில் செல்ல அனுமதிக்கப் பட்டார்.

பத்திரிகையாளர் ஒருவர் இனவாதம் கிளப்புவிதத்தில் எழுதியது தொடர்பாக —அதுவும் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ்— கைது செய்யப்பட்டது, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம் கொண்டு வரப்பட்ட பின்னர்—17 வருட காலத்தில்— இதுவே முதல் தடவையாகும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-6)

### பரீட்சார்த்த ஓட்டத்தின்போது

## ரஷ்ய கவச வாகனங்கள் 5 கி. மீ. சென்றதுமே அவுட்!

கொழும்பு, நவ, 10

பிரச்சினைக்குள்ளாகியுள்ள ரஷ்ய ஆயுதக் கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் ஆரம்பத்தில் கொள்வனவு செய்யப்பட்ட — துருப்புகளை ஏற்றிச்செல்லப் பயன்படுத்தப்படும் — எட்டு கவச வாகனங்களில் ஏற்பட்டுள்ள இயந்திரக் கோளாறுகளைத் திருத்துவதற்கு 10 லட்சம் ரூபா செலவாகும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இக் கவச வாகனங்களின் பரீட்சார்த்த ஓட்டத்தின்போது முதல் ஐந்து கிலோ மீற்றர் ஓடிமுடிந்ததும் அவ் வாகனங்களின் ''கிளச் பிளேட்''டுக்களில் கோளாறு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ—எ)

## பலாலி, மட்டக்களப்பில் தாக்குதல் என வதந்தி

பலாலி மற்றும் மட்டக்களப்பு இராணுவ முகாம்கள் மீது விடுதலைப்புலிகள் பெருந் தாக்குதல் நடத்தியிருப்பதாக தென்பகுதியில் கடந்த இரு தினங்களாக வதந்திகள் பரப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீய சக்திகளினால் பரப்பப்பட்டு வரும் இத்தகைய வதந்திகளை நம்பவேண்டாம் என்று பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைகள் தலைமையகம் அறிக்கை ஒன்றின் மூலம் மக்களைக் கேட்டுள்ளது.

அத்தகைய தாக்குதல் சம்பவம் எதுவும் நாட்டின் எந்தப் பகுதியிலும் இடம்பெறவில்லை என்றும்—

இத்தகைய வதந்திகள் குறித்து மக்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ—ஐ)

## அனுரா பஸ்தியன் கைது!

ஐ. தே. கவின் கொழும்பு மாவட்ட முன்னாள் எம். பியான அனுரா பஸ்தியன் நேற்று கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

பிஸ்டலை ஆகாயத்தை நோக்கிச் சுட்டு பயமுறுத்தியதற்காகவே அவர் கைது செய்யப்பட்டார் என ஏ. எஸ். பி. ஒருவர் தெரிவித்தார். (உ—6)

## வாக்களிக்க ஹெலியில் வந்தார் சந்திரிகா!

கொழும்பு, நவ. 10

பிரதமர் சந்திரிகாவும் அவரது தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்காவும் ஹெலிக்கொப்டர் மூலம் வியாங்கொட சென்று அங்குள்ள அத்தனகல ஸ்ரீசங்கபோதி வாக்களிப்பு நிலையத்தில் வாக்களித்தனர்.

அதன் பின்னர் சந்திரிகா தமது வெற்றி குறித்து சந்தேகமே தேவையில்லை என்று ஆதரவாளர் மத்தியில் குறிப்பிட்டார். பத்து லட்சம் மேலதிக வாக்குகளால் தாம் வெற்றியீட்ட விருப்பதாகவும் அவர் கூறினார்.

ஜனாதிபதி பதவியை ஏற்றவுடன் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (உ—எ—6)

### சுமுகமான...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யைக் கட்டுப்படுத்தினர்.

நேற்று தேர்தல் வன்செயல்களில் இருவர் கொல்லப்பட்டதாக மற்றொரு செய்தி தெரிவித்தது.

பெரும் அசம்பாவிதங்கள் ஏதுமின்றி வாக்களிப்பு நடந்ததாக தேர்தல் ஆணையாளரும் அறிவித்துள்ளார்.

இத்தேர்தல் குறித்து கருத்து வெளியிட்ட சுதந்திரமான அவதானிகள் குழுக்கள் முன்னைய தேர்தல்களைப் போலல்லாது இத் தேர்தல் அமைதியாக நடைபெற்றதாகத் தெரிவித்தனர் என்று பி.பி.ஸி. குறிப்பிட்டது.

மாத்தறையில் தேர்தல் பணியில் ஈடுபட்டிருந்த அதிகாரியான உபசேனா என்பவர் தேர்தல் பணி வேளையில் மாரடைப்பால் மரணமானார் என்று அறிவிக்கப்பட்டது.

சுமார் நூறு தேர்தல் வன்செயல்கள் நேற்று இடம்பெற்றதாகவும்—

ஐ.தே.க. ஆதரவாளர்கள் இருவர் கொல்லப்பட்டதாகவும் பொலீஸ் [illegible] மேற்கோள்காட்டி [illegible] வானொலி அறிவித்தது. (உ—எ—3—6)

### மரநடுகை தொடக்க நிகழ்வு

அராலி, நவ.10

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் அதன் பிரதம வைத்திய அதிகாரியின் தலைமையில் கடந்த 30 ஆம் திகதி தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் பிரகடனப்படுத்திய மரநடுகை ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

வலி. மேற்கு பிரதேச செயலாளர் திரு. கா. சந்திரராசா நிகழ்வைத்தொடக்கி வைத்து உரை நிகழ்த்தினார்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் மில்க்வைற் அதிபர் கலாநிதி க. கனகராசாவும் மர[illegible] கன்றுகளை அன்பளிப்பாக வழங்கினார்கள். (க-12)

# தபால் மூல வாக்களிப்பு முடிவுகள்.

| மாவட்டம் | சந்திரிகா | சிறிமா | ரணசிங்க | ஹட்சன் | ஹரி | கலப்பதி |
|---|---|---|---|---|---|---|
| திருகோணமலை | 2,701 | 1,146 | 02 | 16 | 08 | 08 |
| நுவரெலியா | 3,696 | 2,707 | 10 | 03 | 32 | 10 |
| மாத்தறை | 5,874 | 2,351 | 33 | 13 | 57 | 30 |
| பதுளை | 6,239 | 3,355 | 20 | 09 | 62 | 38 |
| அநுராதபுரம் | 7,676 | 6,099 | 18 | 23 | 60 | 40 |
| மொனராகலை | 3,349 | 1,268 | 07 | 05 | 20 | 23 |
| பொலன்நறுவை | 2,286 | 1,336 | 09 | 07 | 13 | 16 |
| காலி | 9,186 | 4,320 | 33 | 14 | 82 | 63 |
| வன்னி | 989 | 156 | 02 | 01 | 01 | 01 |
| கண்டி | 10,517 | 6,881 | 38 | 31 | 102 | 45 |
| களுத்துறை | 9,049 | 4,533 | 34 | 09 | 98 | 42 |

# தொகுதி ரீதியான முடிவுகள்

## பதுளை மாவட்டம்

### பதுளை

| | |
|---|---|
| சந்திரிகா | 17,416 |
| சிறிமா | 10,210 |
| ரணசிங்க | 104 |
| ஹட்சன் | 255 |
| ஹரிச்சந்திர | 182 |
| கலப்பதி | 76 |

### ஊவாபறணகம

| | |
|---|---|
| சந்திரிகா | 20,307 |
| சிறிமா | 16,031 |
| ரணசிங்க | 139 |
| ஹட்சன் | 335 |
| ஹரிச்சந்திர | 134 |
| கலப்பதி | 141 |

### மகியங்கனை

| | |
|---|---|
| சந்திரிகா | 18,217 |
| சிறிமா | 24,842 |
| ரணசிங்க | 213 |
| ஹட்சன் | 446 |
| ஹரிச்சந்திர | 213 |
| கலப்பதி | 203 |

### ஹாலி-எல

| | |
|---|---|
| சந்திரிகா | 20,090 |
| சிறிமா | 14,430 |
| ரணசிங்க | 153 |
| ஹட்சன் | 491 |
| ஹரிச்சந்திர | 212 |
| கலப்பதி | 146 |

### வியலுவ

| | |
|---|---|
| சந்திரிகா | 15,304 |
| சிறிமா | 11,227 |
| ரணசிங்க | 193 |
| ஹட்சன் | 456 |
| ஹரிச்சந்திர | 145 |
| கலப்பதி | 172 |

### பசறை

| | |
|---|---|
| சந்திரிகா | 19,303 |
| சிறிமா | 13,793 |
| ரணசிங்க | 167 |
| ஹட்சன் | 556 |
| ஹரிச்சந்திர | 176 |
| கலப்பதி | 174 |

### பண்டாரவளை

| | |
|---|---|
| சந்திரிகா | 23,648 |
| சிறிமா | 15,072 |
| ரணசிங்க | 152 |
| ஹட்சன் | 464 |
| ஹரிச்சந்திர | 236 |
| கலப்பதி | 161 |

### வெலிமடை

| | |
|---|---|
| சந்திரிகா | 22,177 |
| சிறிமா | 17,280 |
| ரணசிங்ச | 126 |
| ஹட்சன் | 284 |
| ஹரிச்சந்திர | 164 |
| கலப்பதி | 121 |

### அப்புத்தளை

| | |
|---|---|
| சந்திரிகா | 20,108 |
| சிறிமா | 13,371 |
| ரணசிங்க | 140 |
| ஹட்சன் | 551 |
| ஹரிச்சந்திர | 221 |
| கலப்பதி | 140 |

## குருநாகல் மாவட்டம்

### மாவத்தகம

| | |
|---|---|
| சந்திரிகா | 28,057 |
| சிறிமா | 16,635 |
| ரணசிங்க | 124 |
| ஹட்சன் | 348 |
| ஹரிச்சந்திர | 177 |
| கலப்பதி | 135 |

## கண்டி மாவட்டம்

### குண்டசாலை

| | |
|---|---|
| சந்திரிகா | 23,150 |
| சிறிமா | 18,243 |
| ரணசிங்க | 122 |
| ஹட்சன் | 285 |
| ஹரிச்சந்திர | 237 |
| கலப்பதி | 102 |

### கலகெதர

| | |
|---|---|
| சந்திரிகா | 17,288 |
| சிறிமா | 14,862 |
| ரணசிங்க | 95 |
| ஹட்சன் | 201 |
| ஹரிச்சந்திர | 117 |
| கலப்பதி | 61 |

### தெல்தெனிய

| | |
|---|---|
| சந்திரிகா | 14,309 |
| சிறிமா | 10,742 |
| ரணசிங்க | 90 |
| ஹட்சன் | 238 |
| ஹரிச்சந்திர | 92 |
| கலப்பதி | 85 |

### ஹேவாஹெற்ற

| | |
|---|---|
| சந்திரிகா | 19,303 |
| சிறிமா | 18,076 |
| ரணசிங்க | 119 |
| ஹட்சன் | 318 |
| ஹரிச்சந்திர | 107 |
| கலப்பதி | 74 |

### கம்பளை

| | |
|---|---|
| சந்திரிகா | 29,557 |
| சிறிமா | 19,692 |
| ரணசிங்க | 169 |
| ஹட்சன் | 350 |
| ஹரிச்சந்திர | 193 |
| கலப்பதி | 105 |

## கொழும்பு மாவட்டம்

### கொலன்னாவை

| | |
|---|---|
| சந்திரிகா | 40,296 |
| சிறிமா | 21,313 |
| ரணசிங்க | 201 |
| ஹட்சன் | 202 |
| ஹரிச்சந்திர | 330 |
| கலப்பதி | 156 |

### கோட்டே

| | |
|---|---|
| சந்திரிகா | 31,646 |
| சிறிமா | 16,331 |
| ரணசிங்க | 232 |
| ஹட்சன் | 118 |
| ஹரிச்சந்திர | 521 |
| கலப்பதி | 97 |

## மாத்தறை மாவட்டம்

### தெவிநுவர

| | |
|---|---|
| சந்திரிகா | 30,817 |
| சிறிமா | 14,824 |
| ரணசிங்க | 169 |
| ஹட்சன் | 185 |
| ஹரிச்சந்திர | 185 |
| கலப்பதி | 197 |

### தம்புள்ள

| | |
|---|---|
| சந்திரிகா | 30,879 |
| சிறிமா | 23,776 |
| ரணசிங்க | 187 |
| ஹட்சன் | 602 |
| ஹரிச்சந்திர | 273 |
| கலப்பதி | 229 |

### வெலிகம

| | |
|---|---|
| சந்திரிகா | 34,583 |
| சிறிமா | 16,708 |
| ரணசிங்க | 145 |
| ஹட்சன் | 201 |
| ஹரிச்சந்திர | 173 |
| கலப்பதி | 172 |

### அக்குறஸ்ஸ

| | |
|---|---|
| சந்திரிகா | 32,632 |
| சிறிமா | 18,165 |
| ரணசிங்க | 145 |
| ஹட்சன் | 327 |
| ஹரிச்சந்திர | 175 |
| கலப்பதி | 211 |

### மாத்தறை

| | |
|---|---|
| சந்திரிகா | 32,503 |
| சிறிமா | 15,751 |
| ரணசிங்க | 138 |
| ஹட்சன் | 152 |
| ஹரிச்சந்திர | 205 |
| கலப்பதி | 123 |

## களுத்துறை மாவட்டம்

### பாணந்துறை

| | |
|---|---|
| சந்திரிகா | 42,951 |
| சிறிமா | 20,032 |
| ரணசிங்க | 198 |
| ஹட்சன் | 166 |
| ஹரிச்சந்திர | 340 |
| கலப்பதி | 162 |

### பேருவளை

| | |
|---|---|
| சந்திரிகா | 36,364 |
| சிறிமா | 23,487 |
| ரணசிங்க | 135 |
| ஹட்சன் | 246 |
| ஹரிச்சந்திர | 115 |
| கலப்பதி | 153 |

### களுத்துறை

| | |
|---|---|
| சந்திரிகா | 37,490 |
| சிறிமா | 22,209 |
| ரணசிங்க | 170 |
| ஹட்சன் | 237 |
| ஹரிச்சந்திர | 226 |
| கலப்பதி | 161 |

### ஹொறணை

| | |
|---|---|
| சந்திரிகா | 36,064 |
| சிறிமா | 21,886 |
| ரணசிங்க | 212 |
| ஹட்சன் | 351 |
| ஹரிச்சந்திர | 262 |
| கலப்பதி | 147 |

## கேகாலை மாவட்டம்

### மத்துகம

| | |
|---|---|
| சந்திரிகா | 33,726 |
| சிறிமா | 20,667 |
| ரணசிங்க | 167 |
| ஹட்சன் | 286 |
| ஹரிச்சந்திர | 202 |
| கலப்பதி | 201 |

### ருவான்வெல

| | |
|---|---|
| சந்திரிகா | 23,340 |
| சிறிமா | 18,0¢8 |
| ரணசிங்க | 131 |
| ஹட்சன் | 298 |
| ஹரிச்சந்திர | 137 |
| கலப்பதி | 119 |

## அனுராதபுரம் மாவட்டம்

### மிகிந்தலை

| | |
|---|---|
| சந்திரிகா | 19,935 |
| சிறிமா | 10,541 |
| ரணசிங்க | 66 |
| ஹட்சன் | 267 |
| ஹரிச்சந்திர | 86 |
| கலப்பதி | 97 |

(உ—3—9)

ஒரு பயணப் பெட்டியில்.......
உலகையே மரணப் படுக்கையில் தள்ளக் கூடிய அணுகுண்டு மூலப் பொருள்!!



என்ன..... நம்பமுடியவில்லையா?
நவம்பர் மாத
உலக உலாவைப் பாருங்கள்!
[33707]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org